2024 பிப்ரவரி 21]

இருக்குமேயானால் அந்தப் பணிகளைத் தொடருவதற்கு அரசு முன்னுரிமை அளிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 34, மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

34—

கிராம நிருவாக அலுவலகம்

***45061—திரு. S.S. பாலாஜி:** மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்போரூர் தொகுதி, பெரிய விப்பேடு ஊராட்சியில் உள்ள கிராம நிருவாக அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருப்போரூர் தொகுதி, பெரிய விப்பேடு ஊராட்சியில் உள்ள கிராம நிருவாக அலுவலர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவது தொடர்பான கருத்துரு அரசளவில் ஏதும் நிலுவையில் இல்லை. மேற்படி கட்டடம் கட்டுவது தொடர்பாக உரிய மதிப்பீட்டறிக்கை பொதுப் பணித் துறையிலிருந்து பெறப்பட்டு, கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்படும்போது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள்.

திரு. S.S. பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்போரூர் வட்டத்திலுள்ள பெரிய விப்பேடு மட்டுமல்ல, அரசிற்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் பெரும் வருவாயை ஈட்டித் தரக்கூடிய காணத்தூர் ரெட்டிக்குப்பம்,

முத்துக்காடு, கோவளம், கேளம்பாக்கம், திருவிடந்தை, பையனூர், சிறுதாவூர், பட்டிப்புலம், முள்ளிப்பாக்கம் போன்ற பல்வேறு ஊராட்சிகளிலும் கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் இல்லை. தமிழ்நாட்டின் ஏனைய பகுதிகளிலும் இதுபோன்று கிராம நிருவாக அலுவலகக் கட்டடங்கள் கட்டப்பட்டு, 15 ஆண்டுகளுக்கும் மேலாக இருக்கிறது, ** இவை அனைத்தையும் சீரமைப்பதற்கு அரசு ஒரு சிறப்புத் திட்டத்தைத் தீட்டி, எனது தொகுதியில் இருக்கிற இதுபோன்ற அலுவலகங்களையும், ஏனைய பகுதிகளிலுள்ள அலுவலகங்களையும் சீர்செய்து தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்பதையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். எப்போதும் நல்ல வார்த்தைகளை அழகாகப் பயன்படுத்துங்கள். மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்போரூர் வட்டத்திலுள்ள VAO அலுவலகங்கள் மொத்தம் 46. அதில் 44 அலுவலகங்கள் வருவாய்த் துறைக்குச் சொந்தமான கட்டடங்களிலே இருக்கின்றன. 2 மட்டும்தான் பிற அரசுக் கட்டடங்களில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. தமிழ்நாட்டில் இதுபோன்று நிறைய இடங்களில் பழைய கட்டடங்களில் இருக்கின்றன. அவற்றை மாற்றிக் கட்டுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதி பெறுவதற்காக, துறையின்வாயிலாக மாண்புமிகு முதல்வரின் கவனத்திற்கு இதைக்கொண்டு சென்றுள்ளோம். மொத்தமாக இதுபோன்று 618 கட்டடங்கள் கட்ட அரசின் பரிசீலனையில் உள்ளது.

முற்பகல் 10–40

பெரிய விப்பேடு கிராம நிர்வாக அலுவலகம், ஊராட்சி மன்ற அலுவலகம் மற்றும் ஊராட்சி செயலாளர் அலுவலகம் ஆகியவற்றை ஒன்றிணைத்து, புதிய கட்டடம் அமைக்க சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலரால் மேற்பார்வையிடப்பட்டு, நடவடிக்கையில்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

உள்ளது. உரிய நிதி வழங்கப்பட்டதும், பஞ்சாயத்து அலுவலகம், VAO Office ஆகிய அனைத்து அலுவலகங்களையும் சேர்த்து, மொத்தமாக ஒரே building ஆகக் கட்டுவதற்கு ஒரு plan இருக்கிறது. மொத்தம் 618 இடங்களில் கட்டடங்கள் கட்டுவதற்கு plan இருக்கிறது. அதில் மாண்புமிகு உறுப்பினர் கோரியதையும் எடுத்துள்ளோம் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள்.

திரு. S.S. பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'காணி நிலம் வேண்டும் பராசக்தி' என்கிற சாமானியனின் கனவை, பல இலட்சம் ஏழைகளுக்கு இலவச பட்டாவை வழங்கியதன்மூலம் நிறைவேற்றித் தந்தவர் பராசக்தியைப் படைத்த திராவிட மகாசக்தி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 'ஒரு விளக்கு திட்டம்' என்கின்ற பெயரில் விளிம்பு நிலை மக்களின் வாழ்வில், ஒளி விளக்கை ஏற்றியவர் அவர். ஆனால், இன்றைக்கு belt area என்கின்ற அரசாணையின் மூலமும், மேய்க்கால் நிலங்கள் தொடர்பான ஒரு வழக்கைக் காரணம் காட்டியும், ஏழையெளிய மக்களுக்கு, இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவதும், மின்சார இணைப்பு வழங்குவதும் நிறுத்தப்பட்டிருக்கிறது. St. George கோட்டையில் பறந்து கொண்டிருக்கக்கூடிய திராவிடக் கொடியை டெல்லி செங்கோட்டையில் ஏற்றுவதற்கு, மக்களின் பேராதரவோடு march செய்து கொண்டிருக்கக்கூடிய நம்முடைய மகத்தான மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், வருகின்ற மார்ச் மாதத்திற்குள் இதற்கு ஒரு தீர்வைக் கண்டார் என்றால் பெரும் மகிழ்ச்சியாக இருக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதுகுறித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேய்க்கால் புறம்போக்கு, belt area சம்பந்தமாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இரண்டு முறை கூட்டம் நடத்தியிருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு கலந்துபேசி, இதற்கு ஒரு முடிவு எடுக்க வேண்டுமென்று

நினைக்கிறார்கள். இது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு இருக்கின்ற காரணத்தால், அரசாங்கம் உடனடியாக முடிவெடுக்க முடியவில்லை. இதை எப்படிச் செய்தால் சரியாக வரும், நீதிமன்ற தடையாணை இல்லாமல் எப்படிச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது. அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 35, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

35—

கொள்முதல் நிலையம்

***3017—திரு. கே. பொன்னுசாமி:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலையில் மிளகு, காப்பி மற்றும் மரவள்ளிக் கிழங்கு ஆகியவற்றிற்கான கொள்முதல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

S.N. *210, கொல்லிமலை லேம்ப் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக, சங்க உறுப்பினர்களிடமிருந்து மிளகு, காப்பி போன்ற வேளாண் விளைபொருட்கள் நியாயமான விலைக்குக் கொள்முதல் கமிட்டி மூலமாக ஏற்கெனவே கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றன. எனவே, புதிதாக ஒரு கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி அவர்கள்.*

திரு. கே. பொன்னுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஒன்றியத்தில் அதிகப்படியாக மிளகு மற்றும் காப்பி உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. அப்படி உற்பத்தி*